மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்.

**O.S.No.976/2023**
**Old.No.620/2009**

**PW 3**

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனுசாமி | மதம் | : இந்து |
| தந்தை / கணவர் பெயர். | : நடேசன் | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

**<u>குறுக்கு விசாரணை</u>**

எண்.38, பெரிய தெரு கீழ்கட்டளையில் வசித்து வருகிறேன். மேற்படி விலாசத்தில் 50 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் வசித்து வரும் பெரிய தெருவிற்கும், செல்லியம்மன் கோவில் தெருவிற்கும் சுமார் 1/2 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். 1ம் வாதியின் கணவர் ஹரிராம் மற்றும் பிரதிவாதி ராஜாம் ராம அவர்களை சுமார் 15 வருடங்களாக தெரியும். 1ம் வாதியின் கணவர் ஹரிராம் மற்றும் பிரதிவாதி ராஜாம் ராம் ஆகியோர் சகோதரர்கள் என்றும் கார்பன்டர் தொழில் செய்து வந்தார்கள். இருவரின் தகப்பனார் அண்ணாமலை என்பவரும் கார்பன்டர் தொழில் செய்து வந்தார் என்றால் அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது.

1ம் வாதியின் கணவர் ஹரிராம் மற்றும் பிரதிவாதி ராஜாம் ராம் அவரது தகப்பனார் அண்ணாமலை ஆகியோர்கள் கூட்டு குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் அதை பற்றி நேரடியாக தெரியாது. 1ம் வாதியின் கணவர் ஹரிராம் மற்றும் பிரதிவாதி ராஜாம் ராம்

ஆகியோர்கள் கூட்டு குடும்பமாக வசித்து வந்ததை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் ஆம். 1ம் வாதியின் கணவர் ஹரிராம் இறப்பதற்கு முன்பு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றும், அவர் இறந்த பிறகு பிரச்சினை ஏற்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஆனால் 1ம் வாதியின் கணவர் ஹரிராம் உயிருடன் இருக்கும் போது சொத்து வாங்கி வசித்துவந்தது எனக்கு தெரியும். ஹரிராம் என்பவர் அண்ணன் என்றும், ராஜாராம் தம்பி என்று தெரியும் மற்ற உடன் பிறந்தவர்களை பற்றி எனக்கு தெரியாது.

1ம் வாதியின் கணவர் ஹரிராம் மற்றும் பிரதிவாதி ராஜாம் ராம் மற்றும் அவரது தகப்பனார் அண்ணாமலை ஆகியோர்கள் சொத்து வாங்கி கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் அது எனக்கு நேரடியாக தெரியாது. ஹரிராம் என்பவர் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் அதை பற்றி தெரியாது. தாவா சொத்தானது பொறம்போக்கு நிலம் என்றால் ஆம். எனவே சொத்திற்கு பத்திரம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் ஆம். பிரச்சினை பற்றி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் பிரச்சினை வரும் போது 1ம் வாதி மற்றும் பிரதிவாதி என்னிடம் வந்தார்கள்.

1ம் வாதி மற்றும் பிரதிவாதியிடையே என்ன பிரச்சினை ஏற்பட்டது என்றால் சொத்தினை 1ம் வாதியின் கணவர் வாங்கியுள்ளார் என்றும், அவர் இறந்தவுடன் பிரதிவாதிகள் பாகம் கேட்டு பிரச்சினை செய்ததாக என்னிடம் கூறியதாக எனக்கு தெரியும். 1ம் வாதியின் கணவர் மற்றும் பிரதிவாதிகள் ஒன்றாக வழக்கு சொத்தில் குடும்ப சொத்தாக வசித்து வந்ததாகவும், அதனால் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என்றால் இல்லை. 1ம் வாதியும், பிரதிவாதிகளும் பிரச்சினை என்று என்னிடம் வந்தார்கள். நான் நீதிமன்றத்தை அணுகுமாறு கூறினேன். பிரச்சினை ஏற்படும் போது அந்த தொகுதிக்கு கவுன்சலராக இருந்தேன்.

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை வாதிகளின் வழக்கறிஞர் தயார் செய்தார் நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆம் நான் கூறியதை தட்டச்சு செய்தார்கள். 1ம் வாதி

அழைத்து சென்றதின் பேரில் வழக்கு விவரம் தெரியும் என்றால் இல்லை எனக்கே தெரியும். வழக்கு சொத்தில் உரிமை கேட்டு வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆம். நான் இருவடையே ஏற்பட்ட பிரச்சினையை பஞ்சாயத்து செய்து இருவரையும் நீதிமன்றத்திற்கு அணுகுமாறு கூறியதை பற்றி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் இருவருக்கிடையே என்ன பிரச்சினை ஏற்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் ஆம். நான் தாக்கல் செய்துள்ள எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றும், வாதிகள் அழைத்ததின் பேரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ராஜாராமிற்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் குடும்ப சொத்து என்றும் அதை பற்றி முழுவிவரம் தெரியாமல் வழக்கில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே எனது சாட்சி ஏற்கதக்கதல்ல என்றும், நிராகரிக்கப்பட்ட வேண்டியவை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.